# மட்டக்களப்பு மாவட்ட மண்முனை வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அரசவங்கி முகாமையாளர்களின் ஆளுமைப்பண்பு பற்றிய ஆய்வு

வெற்றிவேல் ஜெயானி

பதிவு இல:- EU/MS/06/37

சுட்டெண்:- EU/EX/MS/923

FCM2122
Project Report
Library - EUSL

இவ் ஆய்வுக்கட்டுரையானது முகாமைத்துவ சிறப்புக் கற்கை நெறியின் (**BBA**) இறுதிவருட பரீட்சையின் ஒரு பகுதியாக கிழக்குப்பல்கலைக் கழகம், இலங்கை வணிக முகாமைத்துவ பீடத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

முகாமைத்துவத்திணைக்களம்
வணிக முகாமைத்துவ பீடம்
கிழக்கு பல்கலைக் கழகம்
இலங்கை

2018

## ஆய்வுச் சுருக்கம்

இவ்ஆய்வானது மட்டக்களப்பு மாவட்ட மண்முனை வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் காணப்படும் அரசவங்கி முகாமையாளர்களின் ஆளுமைப் பண்பு பற்றியதாகும். இதற்காக இங்கு அமைந்துள்ள அரசவங்கிகளான இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி என்பவற்றின் முகாமையாளர்களின் ஆளுமைப்பண்பு பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது ஆளுமைப் பண்பின் ஐந்து காரணிக் கோட்பாடு (Five Factor model–FFM) பற்றிஆராய்ந்துள்ளது அவையாவன புறமுகஆளுமை, வெளிப்படுதன்மை, மனச்சான்றுக்குட்பட்ட தன்மை, ஏற்றுக்கொள்ளும் தன்மை, உணர்ச்சிகளின் ஸ்திரத்தன்மை ஆகியனவாகும்.

இவ்வாய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட எல்லைக்குள் 100 ஊழியர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களது முகாமையாளர்களின் ஆளுமைப் பண்புகளை அறிவதற்கு பல குறிக்காட்டிகள் மூலமான வினாக்கள் வழங்கப்பட்டு தரவுகள் திரட்டப்பட்டது. உணர்ச்சிகளின் ஸ்திரத்தன்மை எனும் ஆளுமைப் பண்பினைக் கண்டறிய முகாமையாளர்களின் தெளிவு, வாழ்க்கைமுறை, தீர்மானம், நிதானமான தன்மை போன்ற குறிகாட்டிகள் மூலமாக வினாக்களும் புறமுக ஆளுமை எனும் ஆளுமைப்பண்பினை கண்டறிய உடை, எந்தநேரத்திலும் ஒரேமாதிரிப் போக்கு, நெறிப்படுத்தல் மற்றும் வேகம் எனும் வினாக்களும், வெளிப்படுதன்மை எனும் ஆளுமைப்பண்பினை கண்டறிய நம்பிக்கை, தலைமைத்துவம், அறிவுரை, தீர்மானம், ஊக்கப்படுத்தல் போன்ற வினாக்களும் ஏற்றுக் கொள்ளும் தன்மை என்ற ஆளுமைப் பண்பினை கண்டறிய சரியான முடிவெடுத்தல், பாரபட்சம், உடன்படுதல் போன்ற கேள்விகளும் முன்வைக்கப்பட்டன.

மேலும் முகாமையாளர்களின் பெறுபேற்றினை அறிய வேலைத்திட்டமிடல், வேலைஏற்பாடு, வேலையின்தரம், செயல்திறன் போன்ற கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. இதற்கான விடைகள் 5 புள்ளி லிக்கெட் அளவை முறை மூலம் ஆராயப்பட்டுள்ளது. இவ் வினாக்கொத்துக்களின் மூலமாக பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளானது சமூக விஞ்ஞானத்திற்கான புள்ளி விபரவியல் மென்பொதி (SPSS) முறையூடாக தரவுப் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.இவற்றினூடாக பெறப்பட்ட முடிவுகள் ஆளுமைப்பண்புக் கூறுகள் மத்திம நிலையில் இருப்பதோடு பெறுபேறுகளும் மத்திம நிலையையே காட்டுகின்றது. அரசவங்கி முகாமையாளர்களின் ஆளுமைப்பண்புகள் பற்றி ஆராயும் போது இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பவை ஒப்பீட்டளவில் சற்று உயர்வாகவும், தேசிய சேமிப்பு வங்கி ஒப்பீட்டளவில் குறைந்த மட்டத்திலும் காணப்படுகிறது. இப்பெறுபேறுகளின் முடிவுகளூடாக முகாமையாளர்கள் தங்களை மேலும்விருத்தி செய்து கொள்வதற்கான சிபாரிசுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.



திறவுச் சொற்கள்:- *ஆளுமைப்பண்பு, முகாமையாளர், அரசவங்கிகள், ஏற்றுக்கொள்ளும் தன்மை, மனச்சான்றுக்குட்பட்ட தன்மை, உணர்ச்சிகளின் ஸ்திரத்தன்மை, புறமுக ஆளுமை, வெளிப்படுதன்மை*

பொருளடக்கம்


| | |
|---|---|
| | பக்க இல |
| ஆய்வுச் சுருக்கம் | I |
| நன்றியுரை | II |
| **அத்தியாயம் 1 அறிமுகம்** | 1 – 6 |
| 1.1 ஆய்வுப்பின்னணி | 1 |
| 1.2 ஆய்வு பிரச்சினை | 3 |
| 1.3 ஆய்வு வினாக்கள் | 5 |
| 1.4 ஆய்வின் குறிக்கோள் | 6 |
| 1.5 ஆய்வு விசாலம் | 6 |
| 1.6ஆய்வு முக்கியத்துவம் | 6 |
| 1.7ஆய்வின் வரையறை | 6 |
| **அத்தியாயம் - 2 நூலாய்வு** | 7 - 11 |
| 2.1அறிமுகம் | 7 |
| 2.2 ஆளுமைக்கான வரைவிலக்கணம | 9 |
| 2.3 ஆளுமை என்பதன் பொருள் | 9 |
| 2.4 ஆளுமையுள்ளோரின் வகைகள் | 9 |
| 2.5 ஆளுமையின் முக்கியத்துவம் | 10 |
| 2.6ஆளுமைப் பண்பில் தாக்கம் செலுத்தும் காரணிகள | 10 |
| 2.7சுருக்கம் | 11 |

| | |
|---|---|
| அத்தியாயம் - 3 எண்ணக்கருவாக்கமும் நடைமுறையாக்கமும் | 12 - 15 |
| 3.1 அறிமுகம் | 12 |
| 3.2 எண்ணக்கருவாக்கம் | 12 |
| 3.3 ஆளுமைப்பண்புக் கூறுகள் | 13 |
| 3.4 நடைமுறையாக்கல் | 14 |
| 3.5 சுருக்கம் | 15 |
| அத்தியாயம் - 4 ஆய்வுமுறைமை | 16 - 21 |
| 4.1 அறிமுகம் | 16 |
| 4.2 மாதிரிப் பரம்பலும் மாதிரி எடுப்பு முறையும் | 16 |
| 4.3 தரவு சேகரிப்பு முறை | 17 |
| 4.4 தரவு மதிப்பீட்டு முறை | 19 |
| 4.5 தரவுமுன்வைத்தல் மற்றும் பகுப்பாய்வு முறைகள் | 21 |
| 4.6 சுருக்கம் | 21 |
| அத்தியாயம் - 5 தரவுமுன்வைப்பும் பகுப்பாய்வும் | 22 - 30 |
| 5.1 அறிமுகம் | 22 |
| 5.2 தனிப்பட்ட தரவுகள் | 22 |
| 5.3 ஆய்வுத்தகவல்கள் | 25 |
| 5.4 சுருக்கம் | 30 |

| | |
|---|---|
| அத்தியாயம் - 6 கலந்துரையாடல் | 31 - 34 |
| 6.1 அறிமுகம் | 31 |
| 6.2 ஆய்வுத்தகவல்கள் | 31 |
| 6.3 சுருக்கம் | 34 |
| அத்தியாயம் - 7 முடிவுகளும் சிபார்சுகளும் | 35 - 38 |
| 7.1 அறிமுகம் | 35 |
| 7.2 முடிவுகள் | 35 |
| 7.3 சிபார்சுகள் | 36 |
| 7.4 சுருக்கம் | 38 |
| வினாக்கொத்து | 40 - 43 |
| உசாத்துணை நூல்கள் | 44 - 45 |